தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மதுரை வேளாண்மை கல்லூரி விழாவில் 32 கல்லூரிகள் பங்கேற்பு

**மேலூர்,**

மதுரை வேளாண்மைக் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற டேலன்ஷியா போட்டிகளில், தமிழகத்திலுள்ள பொறியியல், கலை அறிவியல் மற்றும் வேளாண்மை என 32 கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ-மாணவியர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில், மாணவர்களிடையேயான கலை, இலக்கியம், நாட்டியம், நடனம், கவிதை, பேச்சு, பாட்டு, குறும்படத் தயாரிப்பு உள்ளிட்ட தனித்திறன், குழுத் திறன் போட்டிகள் நடைபெற்றன. இதில், 600-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில், திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி முதல்வர் ப. பாண்டியராஜன், மதுரை பாஸ்போர்ட் அதிகாரி மணீஸ்வரராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டனர். மதுரை வேளாண்மைக் கல்லூரி முதல்வர் சு. சின்னுசாமி தலைமை வகித்து, நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்தார்.

### பூத்துக் குலுங்கும் மாமரங்கள்:விவசாயிகள் மகிழ்ச்சி

**ஆண்டிபட்டி,**

ஆண்டிபட்டி பகுதியில் உள்ள மாமரங்கள் அதிக அளவில் பூத்து வருகின்றன. இதனால் இந்த வருடம் மாவிளைச்சல் அதிக அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆண்டிபட்டி பகுதியில் வைகை அணை, பழையகோட்டை, வருசநாடு மற்றும் பலபகுதிகளில் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலான இடங்களில் மார்கழி மற்றும் தை மாதங்களில் பூ பூக்கும். இந்த காலங்களில் பூச்சிகள் தாக்குதல் ஏற்பட்டு பூக்கள் உதிர்ந்து விடும். பூச்சி நோய் தாக்குதலை கட்டுப்படுத்த மருந்துகள் தெளித்து பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இப்பகுதிகளில் கடந்த இரண்டு வருடங்களாக பருவநிலை மாற்றத்தால் மகசூல் குறைந்து வந்தது. ஆனால் இந்த ஆண்டு மார்கழியில் பெரும்பாலான மரங்களில் பூக்கள் பூத்துள்ளன.

தற்போது வளர்ச்சி அடைந்து பாசி என்னும் நிலையை மாம்பிஞ்சுகள் அடைந்துள்ளன. இந்த நேரத்தில் மழை பெய்தால் பிஞ்சுகளில் உள்ள பசை போன்ற தன்மை மாறிவிடும். இல்லையேல் பசை பட்ட இடங்களில் காய்கள் வெம்பல் ஏற்பட்டு உதிர்ந்து விடும்.

ஒரு சில இடங்களில் மழை பெய்துள்ளது. பெரும்பாலான இடங்களில் மழை பெய்யவில்லை. இதனால் விவசாயிகள் மழையை எதிர்நோக்கியுள்ளனர்.

மேலும் மழை பெய்து, தற்போது பிடித்துள்ள பிஞ்சுகள் உதிராமல் இருந்தால், இந்த ஆண்டு மாவிளைச்சல் அமோகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பீன்ஸ் விலை வீழ்ச்சி அடைந்ததால் மலைவாழ் மக்கள் சோகம்

**உடுமலை,**

பீன்ஸ் விலை வீழ்ச்சி அடைந்து வருவதால் உடுமலை அருகே, மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் வாழ்ந்து வரும் மலைவாழ் மக்கள் சோகமடைந்துள்ளனர். ÷உடுமலை அருகே, தமிழக-கேரள எல்லையில் உள்ள மலைக் கிராமங்களில் சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில், அமராவதி வனச் சரகத்திற்கு உள்பட்ட தளிஞ்சி, தளிஞ்சி வயல் மற்றும் மஞ்சம்பட்டி ஆகிய மூன்று மலைக் கிராமங்களில் விவசாயத்தை பிரதான தொழிலாகக் கொண்டு சுமார் 300 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. ÷இந்நிலையில், 90 நாள்களில் விளையக் கூடிய பீன்ஸ் பயிரை கடந்த டிசம்பர் மாத துவக்கத்தில் மலைவாழ் மக்கள் பயிரிட்டிருந்தனர்.

குத்து பீன்ஸ் மற்றும் கொடி பீன்ஸ் என இரண்டு வகையான பீன்ஸ்களை பயிரிட்டிருந்த மலைவாழ் மக்களுக்கு அவ்வப்போது ஓரளவு மழையும் கைகொடுத்ததால் பீன்ஸ் பயிர் நன்றாக விளைந்தது. பிப்ரவரி 3-ஆவது வாரத்தில் அறுவடைக்கு வந்தது. இதைத் தொடர்ந்து மலைவாழ் மக்கள் பீன்ஸ் அறுவடையை தொடங்கினர். அதைத் தொடர்ந்து மதுரை, ஒட்டன் சத்திரம், திண்டுக்கல் உள்ளிட்ட மார்க்கெட்டுகளில் 1 கிலோவுக்கு ரூ. 90 முதல் ரூ. 100

வரை விலை கிடைத்து வந்ததால் மலைவாழ் மக்கள் மகிழ்ச்சி அடைந்திருந்தனர். இந்நிலையில், கடந்த சில நாள்களாக திடீரென பீன்ஸ் விலையில் சரிவு ஏற்பட்டு வருகிறது. அதிக விளைச்சல் காரணமாக தற்போது கிலோ ஒன்றுக்கு ரூ. 40 முதல் ரூ. 60 வரையே விலைபோவதால் மலைவாழ் மக்கள் சோகமடைந்துள்ளனர். ÷இதனால் ஒரு சிலர் பீன்ஸ் பயிரில் உள்ள முத்துக்களை மட்டும் தனியாக பிரித்தெடுத்து, காயவைத்து, பக்குவப்படுத்தி விற்பனை செய்து வருகின்றனர். அந்த வகையில் காயவைத்த பீன்ஸ் கிலோ ரூ. 70-க்கு மேல் விலை போவது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் இந்த முறை காலதாமதப்படுவதால் மலைவாழ் மக்களுக்கு உடனடியாக பணம் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டு வருகிறது. ÷இது குறித்து தளிஞ்சி மலைவாழ் மக்கள் கூறியது: ÷பீன்ஸ் பயிரை எங்களது மலைப் பகுதியில் இருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ள சின்னாறு வனப் பகுதிக்கு டிராக்டர் மூலமாக கொண்டு வருகிறோம். பின்னர் அங்கிருந்து வாடகை வேன் மூலமாக மதுரை, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் ஆகிய பகுதிகளுக்கு கொண்டு சென்று, மார்க்கெட்டுகளில் விற்பனை செய்து வருகிறோம். இதனால் போக்குவரத்து செலவுகள் அதிகமாகிறது. ÷ஒரு ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் செலவு செய்துள்ளநிலையில் பீன்ஸ், கிலோ ரூ. 40- க்குத்தான விற்பனையாகிறது. இது எங்களுக்கு நஷ்டத்தையே ஏற்படுத்துகிறது. பீன்ஸில் உள்ள முத்துக்களை பிரித்து எடுத்து, காயவைத்து விற்பனை செய்வதில் ஏராளமான நடைமுறை சிக்கல்கள் உள்ளன. மேலும், எங்களுக்கு பணம் கிடைப்பதிலும் காலதாமதம் ஆகிறது என்றனர்.

**பவானிசாகர் நீர்மட்டம்**

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 48.85 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு, விநாடிக்கு 4,431 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 100 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 4.1 டி.எம்.சி.

### கீழ்பவானி பாசனத்திற்கு தண்ணீர்: விவசாயிகள் வலியுறுத்தல்

**கோபி,**

கீழ்பவானி பாசனத் திட்டத்தில் இரண்டாம் முறை பாசனத்திற்கு நீலகிரி மாவட்டத்தில் உள்ள மின்அணைகளில் இருந்து தண்ணீர் வழங்குமாறு, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோபி, நல்லகவுண்டன்பாளையத்தில், கீழ்பவானி முறைநீர்ப் பாசன விவசாயிகள் சபை யு-4 கோட்ட விவசாயிகள் கூட்டம், தலைவர் ராமசாமி தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. செயலாளர் ராஜு வரவேற்றார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

கீழ்பவானி பாசனத் திட்டத்தில் இரண்டாம் முறை பாசனநிலங்களுக்கு பவானிசாகர் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள மின்அணைகளில் இருந்து தண்ணீர் வழங்க வேண்டும். கீழ்பவானி பாசனத் திட்டத்தில் பாசனப் பகுதி மேன்மைத் திட்டம் மூலம் கொப்பு வாய்க்கால்களை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரதான வாய்க்காலின் வலது கரையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.÷பொருளாளர் சுந்தரேசன், உழவர் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் நல்லசாமி, தமிழக விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் செங்கோட்டையன், பாசன சங்க நிர்வாகி பெருமாள், கீழ்பவானி முறைநீர்ப் பாசன விவசாயிகள் கூட்டமைப்பு இணைச் செயலாளர் பாமா வெங்கடாசலபதி உள்பட பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### எள் சாகுபடிக்கு தண்ணீர் திறக்க அமைச்சரிடம் கோரிக்கை மனு

**பவானி,**

கீழ்பவானி அணை பாசனத்தில் தண்ணீர் திறக்கப்படாத ஒரு லட்சம் ஏக்கர் நிலத்துக்கு எள் சாகுபடிக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்று, கீழ்பவானி விவசாயிகள் நலச்சங்கம் கோரிக்கை மனு அளித்துள்ளது. சித்தோட்டில் தமிழக முதல்வர் ஜெயலலிதா பங்கேற்கும் கூட்டத்துக்கான ஏற்பாடுகளைப் பார்வையிட சனிக்கிழமை வந்த பொதுப்பணித் துறை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்திடம், நலச்சங்கம் சார்பில் தலைவர் செ.நல்லசாமி தலைமையில் விவசாயிகள் அளித்த மனு:

நீலகிரி மின் அணைகளில் எடுக்கக்கூடாத தண்ணீர் போக 10 டிஎம்சி தண்ணீர் உள்ளது. கீழ்பவானி அணையில் 4 டிஎம்சி தண்ணீர் இருப்பு உள்ளது. இவற்றைக் கொண்டு கடந்த இரு ஆண்டுகளாக பாசனம் பெறாத பகுதிக்கு எள் சாகுபடி செய்ய தண்ணீர் திறக்க உடனடியாக அரசாணை வெளியிட வேண்டும். ÷கடந்த ஒரு வாரமாக அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான நீலகிரி, குன்னூர் பகுதியிலும், அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதியான மேட்டுப்பாளையம் பகுதியிலும் நல்ல மழை பெய்து வருகிறது. இதனால், நீர்வரத்து 2,000 கனஅடியாக உயர்ந்துள்ளது. இதனால், கடந்த இரு ஆண்டுகளாக தண்ணீர் திறக்கப்படாத பகுதிக்கு எள் பயிருக்கு தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வறண்டது சோலையாறு அணை: 29 அடியாக நீர்மட்டம் குறைவு

**வால்பாறை,**

மழைப் பொழிவு இல்லாததால் சோலையாறு அணையின் நீர்மட்டம் 29 அடியாக குறைந்து, அணையின் நீர்தேக்கப் பகுதிகள் அனைத்தும் வறண்டு காணப்படுகின்றன.

பரம்பிக்குளம் -ஆழியாறு நீர்பாசனத் திட்டத்தின் மூலம் ஈரோடு, திருப்பூர், கோவை மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர். இந்த திட்டத்தின் உயிர்நாடியாக விளங்குவது வால்பாறையை அடுத்துள்ள சோலையாறு அணை.

160 அடி கொள்ளளவு கொண்ட இந்த அணையில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் மூலம் இரண்டு மின்நிலையங்களில் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. வால்பாறை பகுதியில் மழைப் பொழிவு இருந்தால் மட்டுமே அணைக்கு நீர்வரத்து இருக்கும். இப்பகுதியில் கடந்த வருடம் பெய்த கனமழையால், அணை, ஜூன் 28-ஆம் தேதி நிரம்பியது. மழை இடைவிடாது இரண்டு மாதங்கள் பெய்ததால் நீர்மட்டமும் குறையாமல் இருந்து, வெளியேற்றப்படும் தண்ணீர் மூலம் மின் நிலையங்களில் பல ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டது.

இந்நிலையில், தற்போது கடந்த 4 மாதங்களாக மழைப் பொழிவு இல்லாததாலும், கடுமையான வெயில் காரணமாகவும் ஆறுகள், சிற்றோடைகள் அனைத்தும்

வறண்டு போயின. இதன் காரணமாக அணைக்கு நீர்வரத்து முற்றிலும் இல்லாமல் போய், நாளுக்கு நாள் நீர்மட்டம் குறைந்து ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 29.05 அடியாக இருந்தது.

கடந்த ஒரு மாதமாக தண்ணீர் வெளியேற்றப்படாததால் மின் நிலையங்களில் உற்பத்தி இன்றி பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அணையின் நீர்தேக்கப் பகுதிகள் அனைத்தும் வறண்டு, திட்டுதிட்டாக காட்சியளிக்கின்றன.

இதனால், சோலையாறு அணையை காண வரும் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

**திருத்திய நெல் சாகுபடி வயல்களில் வேளாண் இணை இயக்குனர் ஆய்வு**

**ஆற்காடு,**

ஆற்காட்டை அடுத்த திமிரி வட்டார வேளாண்மைத் துறை சார்பில் நடைமுறைப்படுத்தப்படும் விவசாயம் சார்ந்த புதிய தொழில் நுட்பங்களை இணை இயக்குநர் ஜெ.சுந்தர்சிங் அண்மையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

திமிரி ஒன்றியத்துக்குள்பட்ட மருத்துவாம்பாடி, கனியனூர், டி.புதூர் உள்ளிட்ட கிராமங்களில் பயிர் அறுவடை பரிசோதனை, திருத்திய நெல்சாகுபடி வயல்களை ஆய்வு செய்து தொழில்நுட்ப ஆலோசனை வழங்கினார். இந்த ஆய்வின்போது சொட்டு நீர்ப் பாசன முறையின் மூலம் நடைபெற்றுவரும் கரும்பு சாகுபடியையும் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியின்போது திமிரி வேளாண்மை உதவி இயக்குநர் சிவசங்கர் சிங்,வேலூர் வேளாண்மை அலுவலர் (தரக் கட்டுப்பாடு) திலகவதி, திமிரி வேளாண்மை அலுவலர் அஸ்வினி மற்றும் விவசாயிகள் உடனிருந்தனர்.

**பனங்காளி மஞ்சளுக்கு அதிக விலை விவசாயிகள் மகிழ்ச்சி**

**திருச்செங்கோடு,**

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் பனங்காளி ரக மஞ்சளுக்கு அதிக விலை கிடைத்தது.

ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் சுமார் 900 மூட்டை மஞ்சளைக் கொண்டு வந்திருந்தனர்.

இந்த மஞ்சளைக் கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய ஊர்களிலிருந்து 25-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்திருந்தனர். ஏலம் மூலம் ரூ.30 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனையானது.

விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.6500 முதல் ரூ. 7700 வரை விற்பனையானது. கிழங்கு ரகம் ரூ.5950 முதல் ரூ. 6750 வரை விலை போனது. பனங்காளி ரகத்துக்கு ரூ. 11500 முதல் ரூ. 13100 வரை விலை கிடைத்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர் என, சங்கத்தின் மேலாண் இயக்குநர் லோகநாதன் தெரிவித்தார்.

### முட்டை விலை

**நாமக்கல்,**

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.15, சென்னையில் ரூ.3.65 கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.64, முட்டைக் கோழி கிலோ ரூ.45.

### சாமந்தி சாகுபடி பயிற்சி முகாம்

**ஓமலூர்,**

சேலம் மாவட்டம், காடையாம்பட்டியில் அட்மா திட்டத்தின் கீழ் தோட்டக் கலைத் துறை மூலம் செக்காரப்பட்டி கிராமத்தில் சாமந்தி சாகுபடி பயிற்சி முகாம் நடைபெற்றது .

விதை முதல் விதை வரை என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு விவசாயிகளுக்கு பண்ணைப் பள்ளி பயிற்சியளிக்கப்பட்டது. தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் கண்ணன், அலுவலர்கள் குமரவேல், மீனாட்சிசுந்தரம் ஆகியோர் சாமந்தியில் அறுவடை, விற்பனை முறைகள் குறித்து

விளக்கமளித்தனர். ஏக்கருக்கு சராசரியாக நான்காயிரம் கிலோ மகசூல் கிடைக்கும் வகையிலான தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. விவசாயிகளின் சந்தேகங்களுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது. வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் ராஜேந்திரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் ராஜேஷ், ஜெயக்குமார், சுப்பிரமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கொடுவா மீன் வளர்த்தால் அதிக லாபம்

**கும்பகோணம்,**

கொடுவா மீன் வளர்த்தால் அதிக லாபம் கிடைக்கும் என கும்பகோணம் அரசுக் கலைக் கல்லூரியில் நடைபெற்ற பயிலரங்கில் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்ற நிதியுதவியுடன் கும்பகோணம் அரசுக் கலைக் கல்லூரியின் (தன்னாட்சி) விலங்கியல் துறையின் சார்பில் நன்னீரில் கொடுவா மீன் வளர்ப்புப் பயிலரங்கம் கடந்த 6-ம் தேதி தொடங்கி மார்ச் 8 வரை நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் (பொ) முனைவர் ந. ராமகிருஷ்ணன் தலைமை வகித்து தொடங்கி வைத்தார். விலங்கியல் துறைத் தலைவர் கி. பழனிவேலு வரவேற்றார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் ரா. சிவக்குமார் அறிமுக உரையாற்றினார்.

மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலைய மீன் இயல் துறைத் தலைவர் அ.ரெ. திருநாவுக்கரசு பயிற்சிக் கையேட்டை வெளியிட்டுப் பேசியது:

கொடுவா மீன் கடல்நீர்,கழிமுக நீர், நன்னீர் என அனைத்து நீர் நிலைகளிலும் வாழும் இயல்புடையது. புரதச்சத்து நிறைந்தது. கெண்டை மீனுக்குப் பதிலாக வளர்க்கலாம். அதிக விலை போகக்கூடியது. ஆந்திரம், ஒடிசா, மேற்குவங்கம் போன்ற மாநிலங்களில் நன்னீரில் பெருமளவில் கொடுவா மீன் வளர்க்கப்படுகிறது. தமிழகத்திலும் சிறந்த முறையில் வளர்க்க ஏற்ற வாய்ப்புள்ளது. சீர்காழியில் உள்ள ராஜீவ்காந்தி நீர்வாழ் உயிரின ஆராய்ச்சி மையத்திலிருந்து மீன் குஞ்சுகளை வாங்கி பண்ணைகளில் புதிய அணுகுமுறையுடன் மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் வளர்த்து நல்ல பயனை அடையலாம் என்றார். மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி மைய ஆராய்ச்சியாளர்கள் ஆர். சுப்புராஜ்,

முனைவர் எம். கைலாசம், கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையக மண்டல உதவி இயக்குநர் எஸ். கந்தன், வி. சண்முகஅரசு, எஸ். தினகரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

8-ம் தேதி நடைபெற்ற நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் க. மோகனசுந்தரம் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கிப் பேசினார். பயிற்சியில் கெண்டை மீன் வளர்ப்பு தொழிலில் ஈடுபட்ட 30 பேர் பயிற்சி பெற்றனர்.

**மகளிர் தினவிழா: விவசாயப் பெண்களுக்கு விருது**

**நாகர்கோவில்,**

சர்வதேச மகளிர் தின விழாவையொட்டி நாகர்கோவிலில் பைரவி அறக்கட்டளை சார்பில் விவசாய மகளிர் தின விழா நடைபெற்றது. நாகர்கோவில் கஸ்தூரிபாய் மாதர் சங்கக் கட்டடத்தில் நடைபெற்ற விழாவிற்கு டாக்டர் சுமித்ரா ரகுவரன் தலைமை வகித்தார். பைரவி அறக்கட்டளை இயக்குநர் சி. ஷோபா வரவேற்றார்.
தமிழ்நாடு தலித் பெண்கள் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் ஒய். செல்வி சுகுமாரன், கிரியேட் அறக்கட்டளைத் தலைவர் ஆர். பொன்னம்பலம், ஐ.ஒ.பி. மேலாளர்சி.கிருஷ்ணகுமார், மூலச்சல் நாஞ்சில் உழவர் மன்றச் செயலர் பொன்சி பாலன், ஆர்.யூ.சி. இயற்கை விவசாயி கிரேசி ராணி, மாஸ்டர் அறக்கட்டளை இயக்குநர் தோ. நயினார், காட்டுப்புதூர் ஆத்மா நெல் விவசாயி தன்னார்வக்குழுத் தலைவர் பகவதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இயற்கை பாதுகாப்பு அறக்கட்டளைத் தலைவர் டாக்டர் ஆர்.எஸ். லால் மோகன், ஐ.ஒ.பி.முதன்மை மண்டல மேலாளர் ஏ.வி. பத்மராகம் ஆகியோர் விவசாயப் பெண்கள் 12 பேருக்கு விருதுகளை வழங்கினர்.

**நெற்பயிரைத் தாக்கும் இலைச்சுருட்டு புழுக்களை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்**

**திருச்செந்தூர்,**

திருச்செந்தூர் வட்டத்தில், நெற்பயிரில் பரவலாக காணப்படும் இலைச் சுருட்டுப் புழுவைக் கட்டுப்படுத்த, யூரியா உரத்தை அளவுக்கதிகமாக இடக்கூடாது என வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து திருச்செந்தூர் வேளாண் உதவி இயக்குநர் பிரம்மநாயகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

ஆறுமுகநேரி, காயல்பட்டினம், வன்னிமாநகரம், செந்தாமரைவிளை, சோனகன்விளை உள்ளிட்ட பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்களில் அதிகமான தழைச்சத்து உரமான யூரியா, அம்மோனியம் குளோரைடு போன்ற உரங்களை அளவுக்கு அதிகமாக பயிர்களுக்கு இடுவதால் இலைச்சுருட்டுப் புழுக்கள் அதிகமாகி நெற்பயிறைத் தாக்கும் வாய்ப்புள்ளது.

இலைச்சுருட்டுப் புழு தாக்குதல் அறிகுறிகள்: இப்புழுக்கள் நெற்பயிரின் இலைகளை சுருட்டிக்கொண்டு இலையில் உள்ள பச்சையத்தை சுரண்டி சாப்பிடும் அல்லது நெல் பயிரின் இரண்டு இலைகள் ஒன்றுக்கொன்று ஒட்டிக்கொண்டு பச்சையத்தை சுரண்டி சாப்பிடும். இலைச்சுருட்டுப் புழுத் தாக்குதல், நெல் நடவு செய்தபின் தூர் கட்டும் பருவம், பொதிப் பருவம் ஆகிய இரண்டு பருவங்களில் தாக்கும் வாய்ப்பு உள்ளது.

இலைச்சுருட்டுப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்தும் முறை: நெற்பயரில் இலைச்சுருட்டுப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த, யூரியா உரம் குறைத்து இடவேண்டும் அல்லது பிரித்து இடவேண்டும். மேலும் கீழ்க்கண்ட பூச்சி மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

மேலும், இலைச்சுருட்டுப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த, மானோகுரோட்டாபாஸ் - 2 மில்லி (ஒரு லிட்டர் தண்ணீர் சேர்க்க வேண்டும்) அல்லது குளோரோபைரிபாஸ் - 2.5 மில்லி (ஒரு லிட்டர் தண்ணீர் சேர்க்க வேண்டும்) அல்லது குயினல்பாஸ் - 2 மில்லி (ஒரு லிட்டர் தண்ணீர் சேர்க்க வேண்டும்) இவற்றில் ஒன்றை தெளித்து கட்டுப்படுத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கால்நடை ஆய்வாளர்களுக்கு ஆபத்து ஈட்டுப்படி வழங்கக் கோரிக்கை

**திருநெல்வேலி,**

தமிழகம் முழுவதும் உள்ள கால்நடை ஆய்வாளர்களுக்கு ஆபத்து ஈட்டுப்படி வழங்க வேண்டும் என தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

திருநெல்வேலி கேடிசி நகரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சங்கத்தின் பொன்விழா மாநாட்டில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக் கூட்டத்துக்கு மாநிலத்தலைவர் ரா. தாமோதரன் தலைமை வகித்தார். வரவேற்பு குழுத் தலைவர் எஸ். வெங்கட்ராமன் வரவேற்றார். மாநில துணைத் தலைவர் வெங்கடாசலம், மாநில இணைச் செயலர் காமராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுச் செயலர் ரா. வேல்முருகன், முன்னாள் பொதுச் செயலர் தசரதன், ஓய்வு பெற்ற கால்நடை ஆய்வாளர் சங்க மாநிலத் தலைவர் ஆறுமுகம், பொருளாளர் பழனி உள்பட பலர் பேசினர்.

தீர்மானங்கள்:

கால்நடை வளர்ப்போருக்கும், விவசாயிகளுக்கும் உதவிடும் வகையில் அனைத்து கிராமங்களிலும் புதிய கால்நடை மருத்துவ கிளை நிலையங்களை தொடங்க வேண்டும்.

6ஆவது ஊதியக் குழுவில் உள்ள ஊதிய முரண்பாடுகளுக்கு விரைந்து தீர்வு காண வேண்டும். கால்நடை ஆய்வாளர் கல்வித்தகுதியில் உள்ளவருக்கு வழங்கப்படும் ஊதிய விகிதத்தை, இதர துறையில் குறைந்த கல்வித் தகுதிக்கு வழங்கும் நிலையில் உள்ளது, இந்த நிலை மாற வேண்டும். கல்வித் தகுதிக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும் என்பன உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த மாநாட்டில் தமிழகம் முழுவதும் உள்ள மாவட்ட சங்க நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வறட்சியை சமாளிக்க மானிய விலையில் உலர் தீவனம்**

வறட்சியை சமாளிக்க, விவசாயிகளுக்கு மானிய விலையில், தீவனம் கிடைக்கும்படி, தமிழகத்தில் கூடுதலாக, 60 இடங்களில், 5.86 கோடி ரூபாயில்,

உலர் தீவன மையம் அமைக்க, கால்நடை பராமரிப்பு துறை இயக்குனர் உத்தரவிட்டுள்ளார்.

உலர் தீவனம் : வறட்சி காலத்தில், பால் உற்பத்தியை அதிகரிக்க, பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனம் இன்றியமையாதது. வறட்சி காலத்தில், பசுந்தீவனம் பற்றாக்குறை ஏற்படும்போது, கால்நடை வளர்ப்போர், உலர் தீவனத்தை நம்பியுள்ளனர். விவசாயிகளுக்கு, உலர் தீவனம் வெளிச்சந்தையில் அதிகம் கிடைக்காததால், பற்றாக்குறை ஏற்பட்டது. இதை சரிக்கட்ட, கால்நடை பராமரிப்பு துறை மூலம், உலர்தீவன விற்பனை மையம் அமைக்க, தமிழக அரசு முடிவு செய்தது. கால்நடை பராமரிப்பு துறை சார்பில், 12.50 கோடி ரூபாயில், தமிழகத்தில், 125 உலர் தீவன மையம் அமைக்க உத்தரவிடப்பட்டது. மையத்துக்கு தேவையான வைக்கோல் தேவையை பூர்த்தி செய்ய, வைக்கோல் உபரியாக உள்ள விவசாயிகள் மற்றும் வியாபாரிகளிடம், போட்டி விலைப்பட்டியல் பெற்று, கால்நடைத் துறை கொள்முதல் செய்து வருகிறது. இத்திட்டத்துக்கு, கொள்முதல் செய்யப்படும் வைக்கோல் ஈரமில்லாமல், நன்கு உலர்ந்ததாக, ஈரப்பதம், 10 சதவீதத்துக்கு மிகாமல் பெறப்பட்டது. உத்தரவு : பெறப்பட்ட வைக்கோல், சிறு மற்றும் குறு விவசாயி களுக்கு, ஒரு கிலோ வைக்கோல், இரண்டு ரூபாய் மானிய விலை யில், வழங்க உத்தரவிடப்பட்டது. இதற்கிடையே, தமிழகம் முழுவதும், அந்தந்த மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை மூலம், உலர் தீவன மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந் நிலையில், தமிழகத்தில், கூடுதலாக, 60 இடங்களில், உலர் தீவன மையம் அமைக்க, கால்நடை பராமரிப்பு துறை இயக்குனர் பழனிசாமி உத்தரவிட்டுள்ளார். அதன்படி, அரியலூர் மாவட்டத்தில், 29 லட்சத்தில், மூன்று இடம், கோவையில், 19.55 லட்சத்தில் இரு இடம், கடலூரில், 9.77 லட்சத்தில், ஒரு இடம், தர்மபுரியில், 19.55 லட்சத்தில், இரு இடம், திண்டுக்கல்லில், 48.85 லட்சத்தில், ஐந்து இடங்களில் அமைக்கப்பட உள்ளது.

ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, நாகை, தஞ்சை, நீலகிரி, தேனி, திருவள்ளூர் மற்றும் திருவாரூர் மாவட்டத்தில், தலா, 9.77 லட்சத்தில், தலா, ஒரு இடத்தில் உலர் தீவன மையம் அமைக்கப்பட உள்ளது. கரூர், மதுரை, பெரம்பலூர், புதுக்கோட்டை, நாமக்கல், ராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தூத்துக்குடி, திருவண்ணாமலை, வேலூர் ஆகிய மாவட்டங்களில், தலா, 19.55 லட்சத்தில், இரு இடங்களில் மையங்கள் அமைக்கப்பட உள்ளன.

ஒதுக்கீடு : திருச்சி, நெல்லை, விழுப்புரம், திருப்பூர், விருதுநகர் மாவட்டங்களில், தலா, 29 லட்சத்தில், தலா, மூன்று இடங்களில் மையங்கள் அமைக்கப்பட உள்ளன. மொத்தம், 60 இடங்களில் இம்மையங்கள் துவங்க, 5.86 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. லோக்சபா தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தலுக்கு பின் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என, கால்நடை பராமரிப்பு துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வாடும் பயிரை பார்த்து, இனி வாட வேண்டாம்!; வறட்சியை எதிர்கொள்ள வேளாண் துறை 'அட்வைஸ்'

மழையின்றி வறட்சியில் வாடும் பயிர்களை காப்பாற்றி உற்பத்தி குறையாமல் பார்த்துக் கொள்ள, தேவையான ஆலோசனைகளை வேளாண் துறை விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. இதற்காக, ஒவ்வொரு வட்டாரப்பகுதிகளில் செயல்படும் வேளாண்மையங்கள் மூலம் விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.

வறட்சியில் வாடும் பயிரை காப்பாற்றும் வழி குறித்து, பெரியநாயக்கன்பாளையம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் ஷபி அகமது கூறியதாவது: வீணாகும் மழை நீரை பண்ணை குட்டை அமைத்து, தேக்கி வைத்து, அத்யாவசியமான வேளையில் பயன்படுத்தலாம். இந்நீரைக் கொண்டு சிறு தானியங்கள், பயிறு வகைகள் மற்றும் இதர பயிர்களுக்கு வறட்சி காலத்தில் பாய்ச்சி மகசூல் பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளலாம். மானாவாரி நிலங்களில் கோடை உழவு செய்யலாம். அப்போது, கடைசி சால் சரிவுக்கு குறுக்கே இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இச்சாலில், 50 அடி துாரத்துக்கு ஒரு முறை குறுக்கே மண் தள்ளி தடுப்பதால், மழை நீர் வீணாகாமல் சேமிக்க முடியும். இதன் மூலம் வறட்சியை எதிர்த்து செடிகள் சில நாட்கள் வரை தாங்கும் சக்தி பெறுகிறது.மானாவாரி நிலங்களில் வறட்சியை தாங்குவதற்காக ஏக்கருக்கு 30 முதல் 60 வண்டிகள் ஏரி வண்டல் மண் கொட்டினால், வறட்சி காலத்தில் மண் இல்லாவிட்டாலும் வாடாமல் இருக்கும். இது தவிர, நவீன பாசன முறைகள் வாயிலாக தேவையான அளவு நீர் மட்டுமே பாய்ச்சி பயிர்களை காப்பாற்றலாம்.வட்டபாத்தி பாசன முறை, அதிக

இடைவெளியில் பயிரிடும் பயிர்களுக்கு ஏற்றது. இம்முறையில் பாத்திகளை, 4க்கு 4 மீட்டர் சதுரமாக அமைத்து செடியை நோக்கி, ஒரு சதவீத சரிவை உண்டாக்கினால் பாத்திகள் மழை நீரை சேமிக்கும் வங்கியாக செயல்படும்.கம்பு,சோளம், மக்காச்சோளம், பருத்தி பயிர்களுக்கு ஏற்றது. பாத்தி மூலம் நடவு செய்வதை விட, பார் மூலம் நடவு செய்தால் நீர் பாசன அளவு குறைகிறது. இது தவிர, பயிர் திட்டம் மாற்றி அமைத்தல், வறட்சியை தாங்கும் ரகங்கள், விதைளை கெட்டிப்படுத்துதல், ஊட்டமேற்றிய தொழு உரம், பருவம் பார்த்து நீர் பாய்ச்சுதல், முடம் போடுதல் உள்ளிட்ட முறைகளில் பயன்படுத்துவதால் வறட்சியை சமாளித்து பயிர்களை காப்பாற்ற முடியும்.இவ்வாறு, வேளாண் உதவி இயக்குனர் ஷிபி அகமது கூறினார்.

## பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாழைத்தார் விலை உயர்வு

**பொள்ளாச்சி**: பொள்ளாச்சி மாரியம்மன் கோவில் திருவிழா மற்றும் சுற்றுப்பகுதி கோவில்களில், திருவிழா நடைபெறுவதையடுத்து, மார்க்கெட்டில், வாழைத்தார் விலையும் உயர்ந்தது. பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில், வாரம்தோறும் ஞாயிறு மற்றும் புதன் கிழமைகளில், வாழைத்தார் ஏலம் நடைபெறுகிறது. கோபி, உடுமலை, புதுக்கோட்டை, திருச்சி போன்ற வெளி மாவட்டங்கள்; ஆனைமலை, கோட்டூர், சேத்துமடை, நஞ்சேகவுண்டன்பாளையம், சிங்காநல்லுார், தொப்பம்பட்டி போன்ற பொள்ளாச்சி சுற்று வட்டார பகுதிகளிலிருந்து மார்க்கெட்டிற்கு வாழைத்தார்கள் ஏலத்துக்கு கொண்டு வரப்படுகின்றன. தொடர்ந்து, காந்தி மார்க்கெட்டில், வாழைத்தார் ஏலம் நேற்று நடந்தது. மார்க்கெட்டில், வாழைத்தார் வரத்து ஓரளவு இருந்தாலும், கோவில் திருவிழாக்களையொட்டி, இவற்றின் விலையும் உயர்ந்து காணப்பட்டது. பூவம்பழம் - ரூ.420, கற்பூர வள்ளி - ரூ.700, செவ்வாழை- ரூ. 840, மோரிஸ்-ரூ. 360, நேத்திரம் ஒரு கிலோ- 24 மற்றும் கதளி கிலோ 30 ரூபாய்க்கும் ஏலத்திற்கு போனது. வாழைத்தார் வியாபாரிகள் கூறுகையில், 'நேற்று நடந்த ஏலத்தில், 1,600 வாழைத்தார்கள் வந்தன. பொள்ளாச்சி மாரியம்மன் கோவில் திருவிழா மற்றும் சுற்றுப்பகுதியில் உள்ள கோவில்களில், திருவிழா நடைபெறுவதால், வாழைத்தார் வரத்து இருந்தாலும், விலையும் உயர்ந்து காணப்பட்டது,' என்றனர்.

## சரியான 'ரூட்'டில் பீட்ரூட்; சீராக இருக்கும் 'ரேட்'

**கோவை**: 'தமிழகத்தில் பீட்ரூட் விலை சீராக இருக்கும்' என, கோவை வேளாண் பல்கலையில் உள்ள வேளாண் சந்தை தகவல் மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் திருப்பூர், தேனி, நீலகிரி, திண்டுக்கல், கோவை, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் பீட்ரூட் அதிகம் பயிரிடப்பட்டு வருகிறது. 2012ம் ஆண்டில் 1,116 எக்டரில் பயிரிடப்பட்டது.தமிழகத்தில் ஜூன்-ஆகஸ்ட் மற்றும் பிப்ரவரி-மார்ச் மாதங்களில் பயிரிடப்பட்டு, மே, ஜூன் மற்றும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. விவசாயிகள் இந்த ஆண்டு விதைப்பு பற்றி சரியான முடிவுகள் எடுக்க ஏதுவாக, கோவை வேளாண் பல்கலையில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு மையத்தில் செயல்படும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையம், மேட்டுப்பாளையம் சந்தையில் கடந்த எட்டு ஆண்டுகளாக நிலவிய பீட்ரூட் விலையை ஆய்வு செய்தது. இந்த ஆய்வில், அறுவடையின் போது, 2014ம் ஆண்டில் மே, ஜூன் மாதங்களில் மலைப்பகுதியில் விளைந்த பீட்ரூட்க்கு பண்ணை விலையாக கிலோ ஒன்றுக்கு 11 முதல் 13 ரூபாய் வரை கிடைக்கும்.சமவெளி பகுதியில் விளையும் பீட்ரூட்டுக்கு கிலோவுக்கு ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் குறைவாக கிடைக்கும். இந்த விலை விபரங்களை கருத்தில் கொண்டு, விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க வேண்டும் என, வேளாண் சந்தை தகவல் மையம் தெரிவித்துள்ளது.தமிழகத்தில் ஜூன்-ஆகஸ்ட் மற்றும் பிப்ரவரி-மார்ச் மாதங்களில் பயிரிடப்பட்டு, மே, ஜூன் மற்றும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது.

## நாட்டுக் கோழி பண்ணை ஆய்வு

**தாண்டிக்குடி**: தாண்டிக்குடி பகுதியில் அமைக்கப்பட்ட நாட்டுக்கோழி பண்ணைகளை கொடைக்கானல் கால்நடைத்துறை உதவி இயக்குனர் அப்துல் ஹக்கீம் ஆய்வு செய்தார். தமிழகத்தில் நாட்டுக் கோழி வளர்ப்பை ஊக்குவிக்கும் நோக்கில், நபார்டு வங்கி உதவித்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் கொடைக்கானல் கோட்டத்தில் 33 பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. 250 சதுர அடியில் 250 நாட்டு கோழி குஞ்சுகள் வளர்க்கப்படுகின்றன. தாண்டிக்குடி பகுதியில் ஆய்வு செய்து பயனாளிகளுக்கு ரூ.29 ஆயிரத்து 250க்கான செக்கை,

உதவி இயக்குனர் வழங்கினார். கால்நடை மருந்தக டாக்டர் அருண் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

## கால்நடை தடுப்பூசியால் கருச்சிதைவு ஏற்படாது: டாக்டர் விளக்கம்

**வடமதுரை**: ""கால்நடைகளுக்கு தரப்படும் தடுப்பூசிகளால், கருச்சிதைவு ஏற்படாது," என, வடமதுரை அரசு கால்நடை டாக்டர் ரவிசங்கர் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் கூறியதாவது: வடமதுரை பேரூராட்சி, மோர்பட்டி மற்றும் வேல்வார்கோட்டை ஊராட்சிகளில், கால்நடை பராமரிப்புத்துறை மூலம் கோமாரி தடுப்பூசி முகாம் மார்ச் 1 முதல் நடந்து வருகிறது. கோமாரி நோய் தடுப்பூசியை, பிறந்து 3 மாதம் நிறைவான கன்று முதல் நிறை மாத பசு, எருமைகள் என, அனைத்து கால்நடைகளுக்கும் இடலாம். சினை மாடுகளுக்கு தடுப்பூசி இடுவதால் கருச்சிதைவு ஏற்படும் என்ற அச்சம் தேவையற்றது. பிற நோய்களால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு, அந்நோய்களுக்குரிய சிகிச்சையை கால்நடை டாக்டர் மூலம் அளித்தபின் தடுப்பூசி இட்டுக்கொள்வது நல்லது, என்றார்.

## கோமாரி நோய் தடுப்பு முகாமில் டாக்டர்கள் நிம்மதி: கால்நடைத்துறையில் புதிய முறை அறிமுகம்

**திண்டுக்கல்**: கோமாரி நோய் தடுப்பூசி முகாமில் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் வகையில் போதுமான ஊசிகள் வழங்கப்பட்டிருப்பதால், கால்நடைத்துறை டாக்டர்கள் நிம்மதியடைந்துள்ளனர். குழந்தைகளை பாதிக்கும் போலியோவை முற்றிலுமாக ஒழித்ததைப்போன்று, கால்நடைகளை கலங்கடிக்கும் கோமாரியையும் அழிக்க வேண்டுமென முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆண்டிற்கு இரண்டு முறை கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி செலுத்தும் வகையில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் முகாம்களை நடத்த வேண்டுமென கால்நடைத்துறையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் இதுவரை ஐந்துமுகாம்கள் முடிக்கப்பட்டுள்ளன. தற்போது ஆறாவது முகாம் மார்ச் முதல் தேதியில் துவங்கி 21 நாட்கள் வரை நடைபெற உள்ளது. கடந்த முகாம்வரை ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் ஊசி மருந்து பெட்டிகள் மட்டுமே

அனுப்பப்பட்டன. குறைந்தளவு ஊசிகளை மட்டுமே அனைத்து முகாம்களுக்கும் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. கிராமங்களில் தெருதெருவாக டாக்டர்கள் சுற்றும் போது கூடவே ஸ்டவ் அடுப்புகள், மண்ணெண்ணெய் கேன்கள், சுடுதண்ணி பானை போன்றவற்றை எடுத்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இது இல்லாமல் செல்பவர்கள் ஊசியை கொதி நீரில் சுடவைப்பதற்காக கிராமத்தினரிடம் ஸ்டவ் அடுப்பு மற்றும் தேவையான பொருட்களை கொண்டு வருமாறு கெஞ்சிக்கொண்டிருந்தனர். தற்போதைய முகாமில் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் வகையில் போதுமான ஊசிகள் அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதனால், சிரமம் இல்லாதநிலை ஏற்பட்டிருப்பதால், பணியில் ஈடுபட்டுள்ள டாக்டர்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

## துவரையில் நடவு தொழில்நுட்பம்: 30 சதவீதம் விளைச்சல் அதிகரிக்கும்

**தேனி**: தேனி மாவட்டத்தில், துவரையில், 30 சதவீதம் விளைச்சல் அதிகம் எடுக்கும் வகையில், நடவு தொழில் நுட்பம் கடைபிடிக்கப்படுகிறது. விவசாயத்துறை அதிகாரிகள் கூறியதாவது: பாலிதீன் பைகளில் துவரை விதைகளை போட்டு, நாற்று வளர்த்து நடவு செய்யும் தொழில்நுட்பம், தேனி மாவட்டத்தில் கடைபிடிக்கப்படுகிறது. இந்த வகையில் நடவு செய்வதன் மூலம், வழக்கமான விளைச்சலை விட 30 சதவீதம் அதிகம் கிடைக்கும். நடப்பு ஆண்டு 200 ஏக்கரில் துவரை சாகுபடி செய்யப்படுகிறது. இது 100 சதவீதம் மானியத் திட்டமாகும். இத்திட்டத்தில் பாலிதீன்பை, விதை, மருந்து உட்பட அனைத்தும், விவசாயத்துறையே வழங்கும். மற்றொரு திட்டத்தில், 422 ஹெக்டேரில் துவரை சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.இத்திட்டத்தில், தானாக முன்வந்து துவரை நடவு செய்யும் விவசாயிகளுக்கு, மானியம் வழங்கப்படும். விவசாயிகளுக்கு நீர் தூவுவான், தளிப்புநீர் பாசன கருவிகள், பைப் லைன்கள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படும். விருப்பம் உள்ள விவசாயிகள் விவசாயத்துறை அதிகாரிகளிடம் விண்ணப்பிக்கலாம். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## நிலப்போர்வை சாகுபடி மானியம்: தொடர்ந்து வழங்க வலியுறுத்தல்

**தேனி**: நிலப்போர்வை விரித்து சாகுபடி செய்யும் திட்டத்திற்கு, மானியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்,என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். தமிழகம் முழுவதும் வெயிலை சமாளிக்கவும், சாகுபடி செலவை குறைக்கவும், குறைந்த நீரில் அதிக சாகுபடி செய்யும் வகையிலும், நிலப்போர்வை விரித்து சாகுபடி செய்யும் திட்டத்தை தோட்டக்கலைத்துறை அறிமுகம் செய்தது. இத்திட்டத்தில், நிலத்தை உழுத பின், சொட்டுநீர் பாசன அமைப்பு அமைத்து, துளையிடப்பட்ட கருப்புநிற பிளாஸ்டிக் மல்சிங் சீட், நிலத்தில் விரிக்கப்படும். இந்த துளையில், காய்கறி உட்பட என்ன சாகுபடி செய்யப்படுகிறதோ, அந்த விதைகளை நடவு செய்ய வேண்டும்.

இந்த நிலப்போர்வையில் உள்ள துளைகள் வழியாக, விதை வளர்ந்து விடும். ஆனால் நிலம் முழுவதும் மூடப்பட்டுள்ளதால், களைகள் வளராது, நிலத்தில் ஈரம் எளிதில் உலராது, உரமும் நல்ல முறையில் செடிகளுக்கு கிடைக்கும். விளைச்சல் நன்றாக இருக்கும். தண்ணீர் பாய்ச்சும் செலவு, களையெடுக்கும் செலவுகளும் குறைவு. இரண்டு ஆண்டுகளுக்கு முன் அறிமுகம் செய்யப்பட்ட இத்திட்டத்திற்கு, கடந்த ஆண்டு அரசு மானியம் வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டு அதிக எண்ணிக்கையில் விவசாயிகள் நிலப்போர்வை விரித்து சாகுபடி செய்து வருகின்றனர்.ஆனால், அரசு மானியம் கிடைப்பதில் பல்வேறு குளறுபடிகள் ஏற்பட்டு வருகின்றன. இதனால் நிலப்போர்வைக்கும், சொட்டுநீர் அமைப்பிற்கும் அதிக செலவாவதால் விவசாயிகள் தவிக்கின்றனர். இன்னும் சில ஆண்டுகளுக்கு நிலப்போர்வை திட்டத்திற்கு, மானியம் வழங்க வேண்டும், என விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கோடை மழைக்காக காத்திருக்கும் விவசாயிகள்

**தேனி**: தேனி மாவட்டத்தில், பருவமழை தொடங்கிய உடனே விதைக்க வசதியாக விவசாயிகள் விதைகளை வாங்கி, இருப்பு வைத்து காத்திருக்கின்றனர். தேனி மாவட்டத்தில், நான்காவது ஆண்டாக தென்மேற்கு , வடகிழக்கு பருவமழை பொய்த்து விட்டன. இதனால் பெரும்பாலான இடங்களில் நடவு,விதைப்பு பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. பருவமழை இல்லா விட்டாலும், விரைவில் கோடை மழை பெய்யும் என்ற நம்பிக்கையில், விவசாயிகள் விதைகளை வாங்கி

வீட்டில் இருப்பு வைத்து காத்திருக்கின்றனர். தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களில் மட்டும் ஏழு லட்சம் ரூபாய்க்கு, விதைகள் விற்பனையாகி உள்ளன. மக்காச்சோளம், நெல், திசுவாழை கன்றுகள் அதிகளவு விற்பனையாகி உள்ளன. கோடை மழை பெய்த மறுநாளே நடவு, விதைப்பு பணிகளை தொடங்க தயாராக உள்ளனர். மழைக்காக வருணபகவானை வேண்டி யாகமும் நடத்தி வருகின்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**உற்பத்தி குறைவால் மிளகு விலை உயர்வு**



**கொச்சி:** மிளகு பயன்பாடு அதிகளவில் இருப்ப தால் அதன் விலையில் அவ்வப்போது ஏற்றம் காணப்படும். சர்வதேச அளவிலும் உள்நாட்டிலும் மிளகு உற்பத்தி குறைந்துள்ளதாக புள்ளிவிவரங்களில் தெரியவந்துள்ளது. கடந்த ஆண்டு சுமார் 55 ஆயிரம் டன் அளவிற்கு மிளகு உற்பத்தி இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டது.

ஆனால், மதிப்பீடு செய்யப்பட்ட அளவிற்கு உற்பத்தி அதிகரிக்கவில்லை மாறாக 50 ஆயிரம் டன் மட்டுமே உற்பத்தியானது. நடப்பு ஆண்டிலும் இந்த உற்பத்தி வெகுவாக குறையக்கூடும் என்று வர்த்தகர்கள் கருதுகின்றனர்.

இந்நிலையில், அதன் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. தற்போது கொச்சி சந்தையில் ஒரு கிலோ மிளகு ரூ.535க்கு விற்கப்படுவதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

**பசுந்தேயிலை விலை குறைந்தது...**



**குன்னூர்**: நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பெரும்பாலான தேயிலை தூள் குன்னூரிலுள்ள அரசு மற்றும் தனியார் ஏல மையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.ஏல மையங்களில் விற்பனை செய்யப்படும் தேயிலை தூளுக்கு ஏற்றார் போல் பசுந்தேயிலைக்கு உண்டான விலையை விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றனர். கடந்த சில வாரங்களாக ஏல மையங்களில் தேயிலை தூள் விற்பனையும் அதன் விலையும் தொடர்ந்து சரிந்து வருவதால் பசுந்தேயிலைக்கான விலையும் குறைவாகவே வழங்கப்படுகிறது.

இந்த வாரம் சாதாரண ரக பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.13 முதல் ரூ.15 வரையிலும், நடுத்தரம் ரூ.18 முதல் ரூ.20, உயர்வகை ரூ.20 முதல் ரூ.25 என விலை வழங்கப்பட்டுள்ளது.

மகசூல் குறைந்துள்ள நிலையில் கடந்த வாரத்தைவிட இந்த வாரம் ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு 50 பைசா முதல் ரூ.1 வரை விலை குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**ஒரே வாரத்தில் முட்டை விலை 30 காசு குறைந்தது**



**நாமக்கல்:** கடந்த ஒரு வாரத்தில், முட்டை விலை 30 பைசா குறைந்துள்ளது.நாமக்கல்லில், ‘தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின்’ விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடந் தது. இதில் முட்டை விற்பனை பற்றி ஆலோசிக்கப் பட்டது. முட்டை விலை யில், மேலும் 15 காசு குறைக்க முடிவு செய்யப்பட்டது. ஒரு முட்டை யின் பண்ணை கொள்முதல் விலை 330 காசில் இருந்து 315 காசாக நிர்ணயிக்கப்பட்டது.தமிழகத்தில் நிலவும் கடும் வெப்பத்தின் காரணமாக தமிழகத்தில் முட்டை விற்பனை தொடர்ந்து குறைந்து வருகிறது. இதனால், முட்டை விலை குறைக்கப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். ஒரே வாரத்தில் முட்டை விலை 30 காசு வரை குறைக்கப்பட்டுள்ளது.

**உபாசி ஏல மையத்தில் 2வது சிறப்பு தேயிலை ஏலம் 19ம் தேதி நடக்கிறது**



**குன்னூர்** : குன்னூரில், ‘உபாசி’ (தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்கம்) சார்பில் கடந்த ஆண்டு புதிதாக ஏல மையம் துவங்கப்பட்டு ஒரு ஏலம் மட்டுமே நடந்தது. இந்த ஏலத்தில் ஆன்லைன் மூலமாகவும், வர்த்தகர்கள் பங்கேற்க வசதி செய்யப்பட்டுள்ளது.கடந்த ஆண்டு, ‘தங்க இலை விருதுக்கான’ போட்டியில் பங்கேற்ற தொழிற்சாலைகள் உற்பத்தி செய்த 71 ஆயிரம் கிலோ தேயிலை தூள் இந்த ஏல மையத்தில் முதன்முதலாக விற்பனை செய்யப்பட்டது. இதனையடுத்து புதிய தொழில்நுட்பத்தில் இந்த ஏல மையம் புனரமைக்கப்பட்டு, பான் இந்தியா என்ற முறையில் நாடுமுழுவதும் உள்ள வர்த்தகர்கள் பங்கேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. இந்த ஆண்டு தங்க இலை விருதுக்கான போட்டியில் பங்கேற்றுள்ள தேயிலை தொழிற்சாலைகளில் தேயிலை தூள் 80 ஆயிரத்து 329 கிலோ விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டுள்ளது. இதற்காக உபாசியில் வரும் 19ம் தேதி சிறப்பு ஏலம் நடக்கிறது. இதில் கீரின் டீ 2,555 கிலோ, ஆர்த்தோ டெக்ஸ் 22,678 கிலோ, சிடிசி இலை ரகம் 22,919 கிலோ, சிடிசி டஸ்ட் ரகம் 32,177 கிலோவும் அடங்கும்.

**வத்தல் விலை குவிண்டாலுக்கு ரூ.300 உயர்வு**



**விருதுநகர்** : வத்தல் குவிண்டாலுக்கு ரூ.300ம், பாமாயில் டின்னுக்கு ரூ.55ம், கடலை எண்ணெய் டின்னுக்கு ரூ.30 உயர்ந்துள்ளன.ஆந்திரா குண்டூர் வத்தல், மார்க்கெட்டிற்கு தினசரி 60ஆயிரம் மூட்டை வரத்து உள்ளது. விருதுநகர் பெரிய வணிகர்கள் பேரையூர், கமுதி பகுதிகளில் விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்து விடுவதால் விருதுநகர் மார்க்கெட்டிற்கு வத்தல் வரத்து தினசரி 200 மூட்டைகளாக குறைந்துள்ளது. இதனால், வத்தல் விலை குவிண்டாலுக்கு ரூ.300

உயர்ந்துள்ளது. ஏசி வத்தல் குவிண்டால் ரூ.6,700 லிருந்து ரூ.7,000 ஆகவும், லோக்கல் புது வத்தல் குவிண்டால் ரூ.7,500 லிருந்து ரூ.7,800 என உயர்ந்துள்ளது. குரூட் பாமாயில் டன் 880 டாலரில் இருந்து 900 டாலராக உயர்ந்துள்ளதால் பாமாயில் டின் ரூ.1,030 லிருந்து ரூ.1,085 ஆக உயர்ந்துள்ளது. கடலை எண்ணெய் (15கிலோ) டின் ரூ.1,280 லிருந்து ரூ.1,310 என உயர்ந்துள்ளது.

**கோடைகால சாகுபடி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு**

**கறம்பக்குடி,** : கறம் பக்குடி அருகே விவசாய பண்ணைப்பள்ளி வெள்ளாளவிடுதியில் நடைபெற்றது.

கந்தர்வகோட்டை வட்டாரத்தில் அட்மா சீரமைப்பு திட்டத்தின் மூலம் வெள்ளாளவிடுதி ஊராட்சியில் உள்ள விவசாயிகளுக்கு பண்ணை பள்ளி பயிற்சி நடைபெற்றது. கந்தர்வகோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் ரவிந்திரன் விவசாயிகளுக்கு உளுந்து சாகுபடி முறையில் தொழில்நுட்பங்கள் பற்றி விரிவாக விளக்கினார். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு பயிற்சி கையேடுகள், துண்டுபிரசுரங்கள் மற்றும் பேனா வழங்கப்பட்டது. பயிற்சியில் கந்தர்வகோட்டை வட்டாரத்தை சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். மேலும், கோடை சாகுபடி செய்வது குறித்து விவசாயிகளுக்கான விழிப்புணர்வு நடமாடும் வாகன ஊர்வலமும் நடைபெற்றது. ஊர்வலம் கந்தர்வகோட்டை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் தொடங்கி காட்டுநால், மட்டங்கால், வேளாடிப்பட்டடி, வெள்ளாளவிடுதி, கல்லாக்கோட்டை, வீரடிப்பட்டி, குளத்தூர் நாயக்கர்ப்பட்டி, முதுகுளம், பிசானாத்தூர், தச்சங்குறிச்சி, கேமொபுரம், நொடியூர், துவார், ஆத்தங்கரைவிடுதி, சேவியர் குடிக்காடு, நம்புரான்பட்டி, நடுப்பட்டி, மங்கனூர் ஆகிய கிராமங்கள் முழு வதும் சென்று கோடைகால பயிர்கள் சாகுபடி செய்வது பற்றியும், அதன் தொழில் நுட்பங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**எள் பயிரில் பூச்சி, நோய்களை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் வேளாண் அதிகாரி வழிகாட்டல்**

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் சாகுபடி செய்துள்ள எள்

பயிரை தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி விளக்கமளித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியுள்ளதாவது: சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் தற்சமயம் மாசிபட்ட எள் பயிர் வளர் ச்சி மற்றும் பூக்கும் பருவத் தில் உள்ளது. இப்பயிர்களை தாக்கும் பூச்சி மற்றும் நோய் களை கட்டுப்படுத்திட பூச்சிகளை பொறுத்த மட்டில் மிக முக்கியமானது தண்டு பிணைப்பான் மற்றும் காய்பிணைப்பான். இவை தண்டுபகுதியினை ஒன்றோடு ஒன்றாக பிணைத்து துவாரமிட்டு சேதப்படுத்தியும், வளர்ந்த பயிர்களில் இளம் காய்களில் துவாரமிட்டு பூ மற்றும் பிஞ்சுகளை சேதபடுத்தி மகசூல் இழப்பை ஏற்படுத்துகிறது. இவைகளை கட்டுப்படுத்திட விதைத்த 25,35 மற்றும் 50 வது நாட்களுக்கு பிறகு பாசோலோன் 400மில்லி அல்லது மானோகுரோட்டபாஸ் 400 மில்லி அல்லது கார்பரில் 50சத தூள் 400கிராம் இதில் ஏதா வது ஒன்றினை 200லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கர் பரப்பில் மாலை வேளையில் கைதெளிப் பான் கொண்டு தெளிக்க வேண்டும்.

அல்லது 2சதவீதம் வேப் பெண்ணை கரைசலை 2 முறை தெளிக்க வேண்டும். மற்றொரு சேதம் விளைவிக்க கூடிய பூச்சிகளில் காவடி புழுவும் ஒன்று. இப்புழு 60மி.மீ நீளமாகவும், கருமை கலந்த பழுப்பு உடலில் செம்புள்ளிகளுடனும் கருப்பு தலையு டன் காவடி போன்று வளை ந்து செல்லும். இலை களை வெகுவிரைவாக தின்று அழித்துவிடும் இதனை கட்டுப்படுத்திட ஏக்கருக்கு 750மில்லி மாலத்தியான் அல்லது 400மில்லி பென்தியான் மருந்தினை 200லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். நோய்களை பொறுத்தமட் டில் வேர் அழுகல் நோய் மற்றும் பூவிலை நோயாகும். பூவிலை நோய் தாக்கிய செடிகளை முற்றிலும் பிடு ங்கி அழித்துவிட வேண்டும். வேர்அழுகல் நோயை கட்டுப்படுத்த விதைவிதைக் கும் போதே விதையுடன் டிரைக்கோடெர்மாவிரி டின் என்ற பூசானகொல்லி

மருந்தினை ஒரு கிலோ விதைக்கு 4கிராம் வீதம் கலந்து விதைக்க வேண்டும். விதைத்து செடி வளர்ந்த பின் இந்நோய் தோன்றினால் 1 சத கார்பன்டாசிம் (1 லிட்டர் தண்ணீருக்கு 1கிராம் மருந்து) மருந்தினை வேரின் அடிப்பாகத்தில் வேர் நன்றாக நனையும்படி ஊற்ற வேண்டும். இவ்வாறு எள் பயிரை தாக் கும் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தலாம் என அவர் கூறியுள்ளார்.

## மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி போடும் பணி

**செம்பனார்கோவில்,** : நாகை மாவட்டம், செம்பனார்கோவில் அருகே உள்ள பரசலூரில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் இரண்டு நாட்கள் நடைபெற்றது. பரசலூர் ஊராட்சி தலைவர் புஷ்பலதா பன்னீர்செல்வம் தலைமை வகித்தார். ஊராட்சி துணைத் தலைவர் அனிதா மனோகரன் முன்னிலை வகித்தார். பரசலூர் ஊராட்சிக்கு உட்பட்ட சாத்தனூர், மேலக்கட்டளை, மகாராஜபுரம் ஆகிய ஊர்களை சேர்ந்த 400 மாடுகளுக்கு, செம்பனார்கோவில் கால்நடை மருத்துவர் அன்பரசன் தலைமையிலான குழுவினர் கோமாரிநோய் தடுப்பூசி போட்டனர். ஊராட்சி செயலர் மனோகரன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை பரசலூர் ஊராட்சி மன்றத் தலைவர் செய்திருந்தார்.

## வறட்சியை தாங்கி நெற்பயிர் வளர பாக்டீரியா கரைசல்

**ராமநாதபுரம்,** :வறட்சியை தாங்கி நெற்பயிர் வளர புதிய பாக்டீரியா கரைசலை பயன்படுத்தலாம் என வேளாண் அறிவியல் துறை விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம் ஆலங்குளம் கிராமத்தில் வயல் விழா நடந்தது. வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் துரைசிங் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

ராமநாதபுரம் மாவட்டத்தில் நெற்பயிர் மானாவாரியாகவும், நேரடி புழுதி விதைப்பாகவும் சாகுபடி செய்யப்படுகிறது. மழை பொய்த்து விடுவதால் பயிர்கள் வறட்சியினால் பாதிக்கப்படுகிறது. பயிர் முளைத்து தூர் கட்டும் பருவத்தில் வறட்சியை தாக்குப்பிடிக்க முடியாமல் கருகி விடுகின்றன.

நெற்பயிர்கள் வறட்சியை தாங்கி வளர்வதற்கு தேவையான பிபிஎப்எம் (பிங்க் பிக்மேன்ட்டட் பேக்கல்டேடிவ் மெத்தைலோ பாக்டீரியம்) என்ற பாக்டீரியா கரைசலை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அறிவியல் விஞ்ஞானிகள் தற்போது கண்டுபிடித்துள்ளனர். இதனை நெற்பயிர்களில் கைத்தெளிப்பான் மூலம் தெளிப்பதன் வாயிலாக நல்ல பலன் கிடைத்துள்ளது. நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மாவட்டத்தில் ராமநாதபுரம், திருப்புல்லாணி, மண்டபம், பரமக்குடி, போகலூர், கமுதி, கடலாடி, நயினார்கோவில் உள்ளிட்ட 10 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வேளாண்மை அறிவியல் நிலையம் மூலமாக இக்கரைசலை பயன்படுத்தும் விதம் குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி செயல்படுத்தப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

வேளாண்மை அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் மீனாட்சி, ஆனந்த், ராம்குமார் உட்பட பலர் பேசினர். ஆலங்குளம், மாலாங்குடி, கண்ணாங்குடி உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த 75க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை தொடர் சரிவு



நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை நேற்று ஒரே நாளில் 15 காசுகள் சரிவடைந்து, 315 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

முட்டை விலை சரிவு

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 345 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் கடந்த 6–ந் தேதி நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை அதிரடியாக 15 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 330 காசுகளாக சரிவடைந்தது.

இதற்கிடையே நேற்று நடைபெற்ற கூட்டத்தில் முட்டை விலையை மேலும் 15 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 315 காசுகளாக குறைந்து உள்ளது.

பிறமண்டலம்

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– சென்னை–365, ஐதராபாத்–330, விஜயவாடா, தனுகு–345, பார்வாலா–320, மும்பை–368, மைசூர்–357, பெங்களூர்–350, கொல்கத்தா–405, டெல்லி–340.

முட்டைக்கோழி கிலோ ரூ.45–க்கும், கறிக்கோழி கிலோ ரூ.64–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை.

காரணம் என்ன?

ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு நாமக்கல் மண்டலத்தின் முக்கிய விற்பனை ஸ்தலமாக உள்ள கேரளாவில் முட்டை விற்பனை கடுமையாக குறைந்து உள்ளது. இதேபோல் வடமாநிலங்களிலும் முட்டை விற்பனை குறைந்து உள்ளதால், பிறமண்டலங்களிலும் முட்டை விற்பனை குறைந்து வருகிறது. இதுவே விலை குறைப்புக்கு காரணம் என பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

முட்டை விலை தொடர் சரிவை சந்தித்து வருவதால், பண்ணையாளர்கள் கவலை அடைந்து உள்ளனர்.

**ஏரியூர் பகுதியில் விளைச்சல் அதிகரிப்பால் மிளகாய் விலை வீழ்ச்சி**



ஏரியூர் பகுதியில் விளைச் சல் அதிகரிப்பால் மிள காய் விலை வீழ்ச்சியால் விவசாயி கள் ஏமாற்றம் அடைந்துள் ளனர்.

<u>மிளகாய் சாகுபடி</u>

தர்மபுரி மாவட்டம் ஏரியூர் மலைகள் சூழ்ந்த வனப்பகுதி யாகும். ராமகொண்டஅள்ளி, மஞ்சாரஅள்ளி, நாகமரை உள் ளிட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் விவசாயத்தையே பிர தான தொழிலாக கொண்டுள் ளனர். இந்தபகுதிகளில் பருவ மழை பொய்த்து போனாலும் காவிரி தண்ணீரை பயன் படுத்தி விவசாயிகள் விவ சாயம் செய்து வருகின்றனர். தற்போது காவிரி ஆற்றில் தண்ணீர் வற்றி உள்ளதால் ஆற்றங்கரை ஓரம் விவசாயிகள், பொதுமக்கள் மானாவாரி நெல் கம்பு, சோளம் மற்றும் நிலக்கடலை உள்ளிட்ட பயிர்கள் பயிரிட்டுள்ளனர்.

காவிரி ஆற்றில் தண்ணீரை பயன்படுத்தி கடந்த ஆண்டு ஏராளமான விவசாயிகள் மிளகாய் பயிரிட்டு இருந்தனர். அறுவடை செய்த மிளகாய் களை கொளத்தூர், ஏரியூர், மேச்சேரி உள் ளிட்ட பல்வேறு சந்தைகளில் ஒரு கிலோ மிள காய் ரூ.120 வரை விற்பனை செய்து வந்த னர். மேலும் சேலம், ஈரோடு உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த வியாபாரி கள் நேரிடையாகவே விவசாயி களிடம் மிளகாய் களை வாங்கி சென்றனர். கூடுதல் விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

<u>விலை குறைவு</u>

இந்த நிலையில் கூடுதல் விலை, அமோகம் விளைச்சல் காரணமாக இந்தாண்டு புது நாகமரை மற்றும் அதன் சுற்று வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் அதிக அளவில் மிளகாய் பயிரிட்டுள்ளனர். ஆனால் விவசாயிகள் எதிர் பார்ப்புக்கு ஏற்ப மிளகாய் விளைச்சல் அமோகமாக இருந்தது. ஆனால் போதிய விலை கிடைக்கவில்லை. இத னால் அறுவடை செய்யப் பட்ட மிளகாய்களை விவசாயி கள் காயவைத்து மூட்டைகளில் கட்டி வைத்துள்ளனர். கூடுதல் விலை கிடைக்கும் போது சந்தைகள் மற்றும் மார்க் கெட்டுகளில் விற்பனை செய்யப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, கடந்த ஆண்டு மிளகாய் விளைச்சல் அதிக அளவில் இருந்தது. இந்த பகுதியில் விளையும் மிள காய்க்கு பொதுமக்கள் மத்தி யில் நல்ல வரவேற்பு உள்ளதால் கடந்த ஆண்டு ஒரு கிலோ மிளகாய் ரூ.120 வரை விற்ப னையானது. இதனால் இந் தாண்டு ஏராளமான விவ சாயிகள் மிளகாய் பயிர் செய்த னர். விளைச்சல் அதி கமாக இருந்தாலும் விலை குறை வாகவே உள்ளது. தற்போது ஒரு கிலோ ரூ.60 முதல் ரூ.80 வரை விற்கப்படுகிறது.

விலை குறைவால் மிளகாய்களை காயவைத்து இருப்பு வைத்து கூடுதல் விலை கிடைக்கும் போது விற்பனை செய்ய முடிவு செய்துள்ளோம். கூடுதல் விலை கிடைக்கும் என்று கருதிய விவசாயிகள் இந்தாண்டு ஏமாற்றம் அடைந் துள்ளனர் என்று தெரிவித்தனர்.

**மன அழுத்தத்தில் இருந்து விடுபடுவது எப்படி தமிழக அரசின் முதன்மை செயலாளர் வெ.இறையன்பு விளக்கம்**



வெ.இறையன்பு

**கோவை,**

மன அழுத்தத்தில் இருந்து விடுபடுவது எப்படி? என்று தமிழக அரசின் முதன்மை செயலாளர் வெ.இறையன்பு விளக்கம் அளித்தார்.

<u>சொற்பொழிவு நிகழ்ச்சி</u>

கோவை வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில், சொற்பொழிவு நிகழ்ச்சி பல்கலைக்கழக கலையரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு துணைவேந்தர் ராமசாமி தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் தமிழக அரசின் முதன்மை செயலாளரும், அண்ணா மேலாண்மை நிறுவனத்தின் இயக்குனருமான வெ.இறையன்பு கலந்து கொண்டு, ‘மன அழுத்தத்தில் இருந்து விடுபடுவது எப்படி?’ என்ற தலைப்பில் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

நாம் எப்போதும் எல்லா சூழ்நிலையிலும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். எதை செய்தாலும் அதை மகிழ்ச்சியுடன் செய்ய வேண்டும். இந்த உலகில் பறவைகள், விலங்குகள் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களும் தினம், தினம் விடியலை வரவேற்கின்றன. ஆனால் சில மனிதர்கள் மட்டும் அதை செய்வது இல்லை.

<u>மன அழுத்தம்</u>

நல்ல பழக்க வழக்கங்களை 21 நாட்களுக்கு தொடர்ந்து பின்பற்றினால், அவை உங்கள் வசமாகிவிடும். பின்பற்றுவது எளிதாகிவிடும். நாள்தோறும் அதிகாலை 5 மணிக்கு எழுவதன் மூலம் மனம், முகம் மற்றும் உடல் மலர்ச்சியாக இருக்கும். இதேபோல் மன அழுத்தத்தில் இருந்தும் விடுபட முடியும்.

இன்றைய இளைஞர்களின் மிகப்பெரிய பிரச்சினை என்னவென்றால், இலக்குகளை மட்டுமே நிர்ணயிக்கும் அவர்கள், அதற்கான நோக்கம் என்ன என்பதை அறிந்து வைத்திருப்பதில்லை. நோக்கத்தை முன்வைத்து, இலக்கை நோக்கி செல்பவர்களுக்கு மன அழுத்தம் ஏற்படுவது இல்லை. நோக்கம் இல்லாதவர்கள் பாறையைப்போல் கடினமானவர்களாக இருக்கிறார்கள்.

<u>நமது ஆற்றல்கள்</u>

தடைகள் வரும்போதுதான் நமக்குள் இருக்கின்ற ஆற்றல்கள் வெளியே தெரியவரும். அதை உறுதியான மனதுடன் எதிர்கொள்ள வேண்டும். வாழ்க்கை நிரந்தரமற்றதாக இருப்பதால்தான், அது சுவாரசியமாக இருக்கிறது.

மாணவர்களை பொறுத்தவரை படிப்பும், தேர்வுகளும் மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. நாள்தோறும் வகுப்பில் ஆசிரியர்கள் நடத்தும் பாடங்களை, அன்றே படித்துவிட்டால் தேர்வு நேரத்தில் எந்தவித பதற்றமும் இல்லாமல் இருக்கலாம். இதனால் மன அழுத்தமும் ஏற்படாது.

இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் மாணவ-மாணவிகள் கலந்து கொண்டனர்.

**புஞ்சை வயல் சமுதாய கூடத்தில் பண்ணை கருவிகள் இயக்குவது குறித்த பயிற்சி**



**பந்தலூர்,**

பந்தலூர் தாலுகா உப்பட்டி அருகே உள்ள புஞ்சைவயல் சமுதாய கூடத்தில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் பண்ணை கருவிகள் இயக்குவது குறித்த பயிற்சி மற்றும் விவசாயிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவுக்கு மண்வள பாதுகாப்பு உதவி அலுவலர் சுந்தரலிங்கம் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட ஒருங்கிணைப் பாளர் தேவதாஸ், அரசு நடுநிலைப்பள்ளி ஆசிரியர்கள் ரமேஷ், தனலட்சுமி, லதா, ஹேமலதா, கூடலூர் நுகர்வோர் பாதுகாப்பு மைய தலைவர் சிவசுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இதில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**பிரம்மதேசம் பகுதியில் சாமந்தி பூக்கள் அறுவடை பணிகள் மும்முரம்**



**பிரம்மதேசம்,**

பிரம்மதேசம் பகுதியில் சாமந்தி பூக்கள் அறு வடை பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

**<u>சாமந்தி பூ அறுவடை</u>**

பிரம்மதேசம் பகுதியில் சாமந்தி பூ அறுவடை பணி களில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். பிரம்மதேசம் பகுதிகளான ஆலங்குப்பம், வடநெற்குணம், சிக்கனந்தல், டி.புதுப்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் தங்களது விளை நிலங்களில் சாமந்தி பூக்களை சாகுபடி செய்திருந்தனர். தற்போது இவை நன்கு பூத்து குழுங்கி , பார்ப்பவர்களின் கண்களுக்கு நல்ல விருந்தளித்து வருகிறது. இதனை அறுவடை செய்யும் பணிகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இருந்த போதும் சாமந்தி

பூக்கள் விலை குறைந்து காணப்படுவதால் விவசாயி கள் கவலையடைந்து வருகின் றனர்.

இகுகுறித்து விவசாயிகள் கூறுகையில்,

**விவசாயிகள் கவலை**

கடந்த மாதத்தில் சாமந்தி பூ ஒரு கிலோ ரூ.50 என நிர்ணயம் செய்து, வியாபாரி கள் தங்கள் விளைநிலங்களுக்கு தேடி வந்து நேரடியாக கொள்முதல் செய்து வந்தனர். ஆனால் , தற்போது சாமந்தி பூ மகசூல் அதிகமாக உள்ளது. எனவே விலை கடுமையாக குறைந்துள்ளது.

ஒரு கிலோ சாமந்தி பூ ரூ.20 ஆக குறைந்துள்ளது. இதனை அறுவடை செய்து விற்பனை செய்தால், எங்களுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும். இருந்த போதும் வேறு வழியின்றி, நாங்களே பூக்களை அறுவடை செய்து நேரிடையாக வியாபாரிகளிடம் சென்று விற்பனை செய்து வருகிறோம் என்றார்.

**கால்நடை மருத்துவ முகாம்**



**விக்கிரவாண்டி,**

விக்கிரவாண்டி ஒன்றியம் வி.சாத்தனூர் ஊராட்சியில் தமிழ்நாடு கால்நடை துறை சார்பில் கால்நடைகளுக்கு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணைய பொது மேலாளர் சுபாஸ் சந்திரபோஸ்,

துணை பதிவாளர் ராஜா ஆகியோர் கலந்து கொண்டு முகாமினை தொடங்கி வைத்தனர். இதில் கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி, குடற்புழுநீக்கம் ஆகிய சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டது. கால்நடை ஆய்வாளர் செல்வகுமார், உதவியாளர்கள் ரேணுகா, மணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**நெற்பயிரில் பூச்சி-நோய் தாக்குதலை தடுக்கும் வழிமுறைகள்**



**வடகாடு,**

நேரடி நெல் விதைப்பு பற்றிய செயல்விளக்க முகாமில், நெற்பயிரில் பூச்சி- நோய் தாக்குதலை தடுக்கும் வழிமுறைகள் குறித்து வேளாண்மை அதிகாரிகள் விளக்கம் அளித்து பேசினர்.

<u>நேரடி நெல் விதைப்பு செயல் விளக்கம்</u>

வம்பன் அறிவியல் நிலையம் மூலம் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சேற்று வயலில் நேரடி நெல் விதைப்பு பற்றிய செயல் விளக்க பயிற்சி, திருவரங் குளம் ஒன்றியத்தில் உள்ள வடகாடு கிராமத்தில் நடந் தது. நிகழ்ச்சியை வேளா ண்மை அறிவியல் நிலையத் தின் தலைவர் அசோகன் தொடங்கி வைத்து பேசினார். அவர் பேசுகையில், வேளா ண்மையில் எந்திரமயமாக் குதல் இன்றைய கால கட் டம் என்பதையும் நீர் மற்றும் முக்கியத் துவத்தை பற்றியும் விளக்கி கூறி னார். விதை அறிவியல் துறை உதவி பேராசிரியர் கதிரவன் பேசுகையில், நேரடி நெல் விதைப்பு கருவி கொண்டு விதைக்கும் போது, ஒரு ஏக்கருக்கு 16 கிலோ

விதை போதுமானது. வறட்சி காலத் தில் ஒரு சதம் பொட்டாஷ் கரைசலை இலை வழியாக தெளித்து இலை வழி நீர் ஆவியாவதை கட்டுப்படுத் தலாம். இந்த கருவியின் மூலம் ஒரு நாளைக்கு 2.5 ஏக்கர் விதைக்கலாம். 3 ஆட்கள் போதுமானது, என்றார்.

<u>பூச்சி மருந்து தெளிக்கலாம்</u>

பூச்சியல் துறை உதவி பேராசிரியர் சாமிநாதன் பேசுகையில், இலை சுருட்டுப் புழு, இலைகளை நீள வாக்கில் கடித்து பச்சயத்தை சுரண்டி உண்பதால் இலைகளில் வெள்ளை, வெள்ளையாக காணப்படும். இதனால் ஒளிச்சேர்க்கை குறைந்து வளர்ச்சி குறைகிறது. இதன் தாக்குதலை அந்து பூச்சி வயல்களில் பறப்பதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். பொருளாதார சேத நிலைமை தாண்டும்போது டிரை அசோபாஸ் 40 இசி 250 மில்லி லிட்டர், பிப்ரோனில் 5 சதம், எஸ்.வி 500 மில்லி லிட்டர் மேனோகுரோட்டபாஸ் 36 எஸ்.எல் 500 மில்லி லிட்டர் ஆகிய பூச்சி மருந்துகளில் ஏதேனும் ஒன்றினை தெளிக்கலாம். குருத்து பூச்சிகளின் புழுக்கள் இளம் பயிரின் தண்டில் துளையிட்டு உட்சென்று உட்பகுதியை கடித்து உண்ப தால் நடுக்குருத்து வாடி காய்ந்து விடும். கதிர் பிடிக்கும் பருவத்தில் தாக்கும்போது வெளிவரும் கதிர்களில் மணிகள் பால் பிடிக்காமல் சாவியாகி வெண்கதிர்களாக மாறும். விளக்கு பொறி வைத்து தாய் அந்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். ட்ரைகோ கிராம்மா ஜப்பாணிக்கம் முட்டை ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2 மில்லி லிட்டர் அளவில், நடவு செய்த 15 நாட்கள் முதல் வாரம் ஒரு முறை 4 வாரத்திற்கு கட்டி முட்டைகளை அழிக்கலாம். ஏக்கருக்கு அசிபேட் 75 எஸ்.பி 400 கிராமும், புரோ பினோபாஸ் 50 இசி 500 மில்லி என ஏதேனும் ஒரு பூச்சி மருந்தை தெளிக்கலாம், என்றார்.

**கறவை மாடு வளர்ப்பு பயிற்சி**

**குன்னம்,**

வேப்பூர் களப்பகுதி வடக்கலூர் ஊராட்சியில் காந்தி நகர் குடியிருப்பு பகுதியில் புது வாழ்வு திட்டத்தின் மூலம் கறவைமாடு வளர்ப்பு பற்றி பயிற்சி

அளிக்கப்பட்டது. இதில் புது வாழ்வு உதவி திட்ட மேலாளர்கள் சரவணன் மற்றும் அரசு ஜெய்கணேஷ் ஆகியோர் முன்னிலை வகித்து கறவை மாடு வளர்ப்பு பற்றியும் மற்றும் தீவன முறைகள் பற்றியும் எடுத்துக் கூறினார்கள். வ.அகரம் ஆவின் பால் கொள்முதல் நிலையத்தின் செயலா ளர் காமராஜ் கலந்து கொன்டு பால் கொள்முதலை தொடங்கி வைத்தார். வடக்கலூர் கிராம வறுமை ஒழிப்பு சங்க செய லாளர் அம்சவள்ளி வரவேற்று பேசினார். இவ்விழாவில் புது வாழ்வு திட்ட வேப்பூர் களப்பகுதி அணித்தலைவர் ராஜா ஒருங்கிணைப் பாளர்கள் பெரியசாமி, குமார், சதீஷ் குமார், தேன்மொழி, சுபாஷினி, ஆகியோர் கலந்து கொண் டனர். இறுதியாக வடக் கலூர் கிராம வறுமை ஒழிப்பு சங்க கணக்காளர் அஞ்சுகம் நன்றி கூறினார்.

**தேனி மாவட்டத்தில் வரத்து குறைவால் தேங்காய் விலை அதிகரிப்பு ஒரு காய் ரூ.15–க்கு விற்பனை**



**ஆண்டிப்பட்டி,**

தேனி மாவட்டத்தில் சந்தைகளுக்கு வரத்து குறைவால் தேங்காய் விலை அதிகரித்து உள்ளது. சில்லறை விற்பனையில் ஒரு தேங்காய் ரூ.15–க்கு விற்கப்படுகிறது.

<u>தேங்காய் வரத்து குறைவு</u>

தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுகளாக மழை போது மான அளவு பெய்யாததால் விவசாயம் முற்றிலும் பாதிக் கப்பட்டுள்ளது. தேனி மாவட் டத்தில் பருவமழை கைகொடுக்க தவறியதால் தென்னை சாகுபடி கடுமை யான பாதிப்பை சந்தித்துள் ளது. மாவட்டத்தில் பரவலாக அனைத்து பகுதிகளிலும் தென்னை சாகுபடி செய்யப் பட்டு உள்ளது. இந்த நிலையில் கடந்த சில ஆண்டுகளில் தேனி மாவட் டத்தின் அனைத்து பகுதி களிலும் நிலத்தடிநீர் அதல பாதாளத்திற்கு சென்று விட்டது. இதையடுத்து மாவட்டத்தில் ஏராளமான பகுதிகளில் உள்ள தென்னந் தோப்புகள் நீரின்றி காய்ந்து விட்டன. சாகுபடி பரப்பளவு குறைந்ததாலும், வறட்சி காரணமாகவும் சந்தைகளுக்கு தேங்காய் வரத்து அடியோடு குறைந்துள் ளது.

<u>விலை அதிகரிப்பு</u>

வரத்து குறைந்ததால் தேங்காய் விலை கிடு, கிடு வென அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு ஒரு தேங்காய் அதிக பட்சமாக ரூ.6 வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால் தற்போது ஒரு தேங் காயின் விலை ரூ.12–ஆக உயர்ந்துள் ளது. சில்லறை விற்பனையில் ஒரு தேங்காய் ரூ.15வரைவிற்கப் படுகிறது. விளைச்சல் குறைந்துள்ள தால்தான் தேங்காய் விலை அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின் றனர். வறட்சி இன்னும் தொடர் வதால் இனிவரும் நாட்களில் தேங்காய் விலை மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ள தாக வியாபாரிகள் கூறு கின்றனர். இதற்கிடையே சில்லறை விற்பனைக்கு கூட தேங்காய் கிடைக்காமல் சிறு, சிறு வியாபாரிகள் அவதி அடைந்து வருகின்றனர்.

**கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**



**இளையான்குடி,**

இளையான்குடி அருகே கீழாயூரில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. முகாமிற்குபேரூராட்சி தலைவர் அயூப்அலிகான் தலைமை தாங்கினார். கவுன்சிலர்கள் மகபூப் நிஷா சேக், லட்சுமி முனியாண்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர். டாக்டர் முருகன் தலைமையில் ராமச்சந்திரன், அங்குச்சாமி குழுவினர் 200க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். இளையான்குடி, இடையவலசை, அரனை யூர், பூச்சியேந்தல், சோதுகுடி ஆகிய இடங்களில் சிறப்பு முகாம் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை விவசாய குழு உறுப்பினர்கள் ராமநாதன், அப்துல்ரகுமான் ஆகியோர் செய் திருந்தனர்.

**ராமநாதபுரம் மாவட்டத்தில் திடீர் மழை: மிளகாய், பருத்தி விவசாயிகள் மகிழ்ச்சி**



**ராமநாதபுரம்**,

ராமநாதபுரம் மாவட்டத்தில் பெய்து வரும் திடீர் மழையால் மிளகாய் மற்றும் பருத்தி பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>புத்துயிர் பெற்றன</u>

ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை சராசரி அளவான 501 மில்லி மீட்டருக்கு பதிலாக 362 மில்லி மீட்டர் மட்டுமே பெய்தது. அதுவும் விவசாயத்திற்கு தேவைப்படும் நேரத்தில் பெய்யாததால் நெல் விவசாயம் அடியோடு நாசமானது. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்தனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் பணப்பயிர் என்று அழைக்கப்படும் மிளகாய் விவசாயமும், வெள்ளை தங்கம் என்று அழைக்கப்படும் பருத்தி விவசாயமும் இந்த ஆண்டு கைகொடுக்குமா? என்ற எதிர்பார்ப்புடன் விவசாயிகள் சாகுபடி பணிகளை தொடங்கினர். அதன்படி இந்த ஆண்டு 2,300 எக்டேரில் பருத்தியும், 17,600 எக்டேரில் மிளகாயும் பயிரிடப்பட்டு உள்ளது.

இதில் பருத்தி செடிகள் தற்போது 15 முதல் 20 நாள் பயிராக வளர்ந்துள்ளன. கடந்த சில நாட்களாக லேசான தூரலுடன் அவ் வப்போது மழை பெய்து வருவது பருத்தி பயிருக்கு உயிர்நீராக அமைந்துள்ளது. இதனால் அவை அனைத்தும் புத்துயிர் பெற்றுள்ளன.

<u>சிறுதானியங்கள்</u>

இதேபோல மிளகாய் பயிர்களுக்கு நீர் இல்லாததால் முதல் முறையின்போது காய்கள் இல்லாமல் இருந்தது. தற்போது அடுத்தடுத்த பறிப்புக்கு தேவையான மழை பெய்து வருவதால் இந்த ஆண்டு மிளகாய் விவசாயம் நன்றாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. நேற்றும் திடீரென மழை பெய்ததால் மிளகாய் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

அத்துடன் தொடர்ந்து மழை பெய்தால் சிறுதானிய பயிர்களுக்கும் பயனுள்ளதாக அமையும். தற்போது மாவட்டத்தில் 2,329 எக்டேரில் எள்ளும், 3,300 எக்டேரில் கடலையும் பயிர் செய்யப்பட்டுள்ளது. வளி மண்டலத்தில் ஏற்பட்டுள்ள சுழற்சி மற்றும் வெப்ப சலனம் காரணமாக தொடர்ந்து மழை பெய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த காலங்களில் வடகிழக்கு பருவமழை பொய்க்கும் போதெல்லாம் மார்ச் மாதத்தின் இறுதியில் தொடங்கி ஏப்ரல் மாதத்தில் நல்ல மழை பெய்வது வழக்கம். இதற்கு ஏற்றாற்போல் தற்போது மழை பெய்து வருவதால் மிளகாய், பருத்தி, மற்றும் சிறு தானியங்களுக்கு போதுமான தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கருதுகின்றனர்.

**ராஜபாளையம் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் கனமழை அருவிகளில் நீர்வரத்து அதிகரிப்பு**



ராஜபாளையம் மேற்கு தொடர்ச்சிமலைப்பகுதியில் பெய்த கனமழையால் 6-வது மைல் நீர்த்தேக்கத்திற்கு தண்ணீர் வரத்து அதிகரித்து இருப்பதை படத்தில் காணலாம்.

**ராஜபாளையம்,**

ராஜபாளையம் மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் பெய்த கனமழையால் அருவிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

<u>மேற்கு தொடர்ச்சி மலை</u>

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் பகுதியில் கடந்த ஒரு வருடமாக போதிய மழை இல்லை. இதனால் விவசாயிகள், பொதுமக்கள் தண்ணீர் பற்றாக்குறையால் அதிகளவில் பாதிக்கப்பட்டு வந்தனர்.

இந்தநிலையில் மேற்குத் தொடர்ச்சி மலை அய்யனார் கோவில் ஆற்றுப்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு சுமார் 2 மணி நேரம் கன மழை பெய்தது. இந்த கனமழையால் அருவிகளில் அந்த பகுதியில் உள்ள அய்யனார் அருவி உள்பட பல அருவிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

மேலும் ஆற்றுப்பகுதியில் அதிகளவில் வரும் தண்ணீரை நகராட்சி குடிநீர் 6-வது மைல் நீர்தேக்கத்தில் தொடர்ந்து ஏற்றவும் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. இதனால் இங்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. தற்போது நகராட் சியில் இருந்து அனைத்து வார்டு பகுதி களுக்கும் 10 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. தற்போது பெய்த கனம ழையால் நீர்தேக்கத்தில் நீர் ஏற்றப்படுவதால் தண்ணீர் பற்றாக்குறை குறையும். இத னால் நகராட்சி பகுதியி

ல்குடிநீர் வினியோகம் செய்யப் படும் நாட்களின் இடைவெளியும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.